1972 டிசம்பர் 2] [திரு. நா. வீராசாமி]

திற்கு மாசு ஏற்படுத்துகிற வகையில் தன்னுடைய அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டுகளை நான் சபாநாயகர் அவர்கள்மீது சுமத்தி, அவர் உடனடியாகப் பதவியிலிருந்து விலகவேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.

MR. DEPUTY SPEAKER: Now I put the motion of Thiru N. Veerasami to the vote of the House.

The motion was put by Mr. Deputy Speaker and declared carried.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, 1972-73-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இரண்டாம் துணை நிதி அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளிப்பார்கள்.

(கூச்சல், குழப்பம்)

(5) 1972-73-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இரண்டாவது துணை மானியக் கோரிக்கை—அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 1972-73-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்து இரண்டாவது துணை மானிய கோரிக்கையை சபையிலே படித்துவிட்டதாக ஏற்றுக் கொண்டு, அதை நடவடிக்கை குறிப்பிலே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். துணை மானியக் கோரிக்கை இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டிருப்பதால், நடவடிக்கைக் குறிப்பில் அது ஏறும்.

"அவைத் தலைவர் அவர்களே, 1972-73-ஆம் ஆண்டிற்கான இரண்டாவது துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கையொன்றும் இம்மன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை 4.72 கோடி ரூபாயாகும். இதில் 3.95 கோடி ரூபாய், வருவாய்க் கணக்கின் கீழ் வருவதாகும்; எஞ்சிய தொகை மூலதன, கடன் கணக்குகளைச் சார்வதாகும். மத்திய அரசு நிதிப் பொறுப்பேற்று, நாம் நடத்தும் திட்டங் களுக்கென 2.82 கோடி ரூபாய் அளவிற்கு இம் மானியங்களில் நிதி

ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் கீழ் வரும் முக்கியமான செலவினங்கள் சிலவற்றைச் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

2. தற்போது வடகிழக்குப் பருவ மழை ஓரளவுக்கு நன்றாக இருப்பினும், மே திங்கள் முதல் ஆகஸ்ட் திங்கள் வரையிலான தென் மேற்குப் பருவ மழைக் காலத்தில் மழை குன்றியதன் விளைவாக, வறட்சியின் சாயல் தமிழ்நாட்டில் நிலவியதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். அதனால், விளைபொருள் உற்பத்தி பெருமளவுக்குக் குறைந்து, வேளாண்மை வருமானமும் பாதிக்கப்பட்டது; பல பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடும் நிலவியது. குடிநீர் வழங்க வகை செய்யும் பொருட்டு, உடனடி நடவடிக்கையாக, குடிநீர் மிகவும் பற்றாக்குறையாக உள்ள பகுதிகளில் பொதுக் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தும் செலவிற்காக முதற்கண் 25 இலட்சம் ரூபாயை அரசு வழங்கியது. குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல், புதிய குடிநீர்க் கிணறுகளை அமைத்தல், ஊருணிகள், மற்ற சிறு பாசன அமைப்புகளைச் சீர்செய்தல் போன்ற துயர் துணிப்புப் பணிகளுக்கென மேலும் ஒரு கோடி ரூபாயை, மத்திய அரசின் நிதி உதவியை எதிர்நோக்கி, அரசு செலவிட முடிவு செய்தது. துணை மதிப்பீட்டில் மானியம் 31-இன் கீழ், 1.25 கோடி ரூபாய் இதற்கென நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

3. கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் நான் அறிவித்தபடி, தனி நபர் குழுவின் பரிவுரைகளைக் கருத்திற் கொண்டு, அரசுப் பணியாளர் பதவித் தரங்கள் சிலவற்றின் சம்பள வீதங்களைத் திருத்த அரசு ஆணையிட்டது. இவற்றைச் செயற்படுத்த முழு ஆண்டிற்காகும் செலவு, ஏறத்தாழ ஐந்து கோடி ரூபாயாகும்; இவ்வாண்டு இதற்கென இரண்டரைக் கோடி ரூபாய் செலவாகும். தொடக்கச் செலவை ஈடு செய்ய, இதற்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 50 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. "மானியம் 33" இல் இதற்கென அடையாள நிதி ஒதுக்கம் கோரப்பட்டுள்ளது.

நமது நாட்டின் விடுதலை நாள் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின்போது நமது விடுதலைப் போராட்ட வீரர்

களுக்கு திங்களொன்றுக்கு ரூ. 75 வீதத்தில் மானியத் தொகையை உயர்த்தி வழங்குவதென ஆகஸ்டில் நடந்த சட்ட மன்றக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டது. அவ்வாறு உயர்த்தப்பட்ட மானியத் தொகையை வழங்குவதற்கான ரூ. 27.48 இலட்சம் தொகைக்கும் இக்கோரிக்கை வகை செய்கிறது.

4. புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு அரசு தொடர்ந்து முயற்சித்து வருகிறது. படித்தவரிடையேயிலும் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்காக இதுவரை ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள திட்டங்களுக்குக் கூடுதலாக, மொத்தமாக ரூ. 28.30 இலட்சம் தொகைக்கு அரசு புதிய திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தொழிற்கல்வி பெற்றுள்ள 200 பேர்களுக்குப் பயிற்சியளித்தல், பல்வேறு தொழிற்பேட்டைகளில் 43 தொழிற்கூடங்கள் கட்டுதல், தமிழ் நாடு மாநிலச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தொழிற்கல்வி பயின்று வேலையற்றிருப்போருக்கு இயந்திரங்களை வழங்குவதற்கான உதவி ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கம் மேற்சொன்ன தொகையில் அடங்கும். இவற்றுக்கான நிதி ஒதுக்கம் 20, 40, 47 மானியங்களின்கீழ் வேண்டப்பட்டுள்ளது.

5. படித்து வேலையற்றிருப்போருக்கு வேலை வாய்ப்பளிக்கவும், விரிவடைந்துவரும் தொடக்கக் கல்வியின் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும், 1972-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து கூடுதலாக 900 பட்டதாரி ஆசிரியர்களையும் தேவையான கூடுதல் பணியாளர்களையும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் அரசு நியமித்துள்ளது. இதற்கென எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 45.76 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை "மானியம்-13"-இன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

6. பெருமளவில் தெளிப்பான்களைப் பயன்படுத்தி, ஒரு இலட்சம் ஏக்கர் பரப்பில் பயிர்ப்பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. முதற்கண், இத் திட்டம் ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். இதற்கு "மானியம்—16" வகை செய்கிறது. தமிழ்நாட்டில் சூரியகாந்திச் செடி வளர்ப்பு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகும் 31.06 இலட்ச ரூபாய்ச் செலவும் இதே மானியத்தில் இடம் பெற்றுள்ளது.

7. காவல்துறைக் குழுவின் பரிந்துரையை ஒட்டி, கோயம் புத்தூர் மாவட்டத்தை இரு காவல்துறை மாவட்டங்களாகப் பிரிப்பதற்கு ஆகும் செலவு, இத் துணை மானியக் கோரிக்கை களில் இடம் பெறுகின்றது. மாநிலக் காவல்துறையை நவின மாக்கி மேம்படுத்துவதற்காக, ரூ. 42.50 இலட்சத்திற்கும், இம் மானியக் கோரிக்கைகள் வகை செய்கின்றன.

8. கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகமாக்கு வதற்கென ஏற்கெனவே எடுத்துள்ள நடவடிக்கைகளுடன், தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ரூ. 20 இலட்சம் கூடுதல் பங்கு முதலீடாக அரசு அளித்துள்ளது. இதன் விளைவாக ஆரம்பச் சங்கங்களிலிருந்து கூடுதலாகக் கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்வதற்காக அதிகப்படியான நிதி வசதியினை இச் சங்கம் பெற முடிந்துள்ளது.

9. இளமைப் பருவத்தில் வலிவு மிகு உடலுடன் விளங்குவது, வளமான வருங்கால வாழ்வுக்கு அரண்பமையாகும். இதனைக் கருத்திற் கொண்டு சென்னை மாநகரிலுள்ள பள்ளிகளில், 1 முதல் 6 வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு உடல்நலப் பரிசோதனை செய்யும் திட்டத்துக்காக, ரூ. 3 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. இத்தொகைக்கு 14-ஆம் மானியத்தின்கீழ் அவையின் ஒப்பளிப்பு வேண்டப்பட்டுள்ளது.

10. இம் மாநிலத்தில், ஒரு கோடி ரூபாய் மொத்தச் செலவாகும். கிராமப்புற குடிநீர் வழங்கு விரைவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, தமிழ் நாடு குடிநீர் வழங்கு-கழிவு நீர் அகற்று வாரியத்துக்கு ரூ. 25 இலட்சம் முதல் தவணையாக அரசு வழங்கியுள்ளது. இச்செலவுக்கு 15-ஆம் மானியத்தின்கீழ் அவை யின் ஒப்பளிப்பு கோரப்பட்டுள்ளது.

11. குடிசைப் பகுதி மாற்றி அமைக்கும் திட்டங்களுடன், சென்னை மாநகரில் உள்ள குடிசைப் பகுதிகளில் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூ. 84 இலட்சம் தொகை செலவிற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. குடிசை மாற்று வாரியத்துக்கு, இதற்கென முதல் கட்டமாக, ரூ. 21 இலட்சம் அரசு கொடுத்துள்ளதற்கு, "மானியம் 29"-ன் கீழ் சட்டமன்றத்தின் ஒப்பளிப்பு கோரப்படுகிறது.

12. துணை மானியக் கோரிக்கைகளில் சேர்ந்துள்ள முக்கிய செலவினங்களைப் பற்றி நான் இதுவரை கூறியுள்ளேன். உறுப்

பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்புகளில் இவை பற்றிய விரிவான விவரங்களைக் காணலாம். 1972-73-ஆம் ஆண்டுக்கான இரண்டாவது துணை மதிப்பீடுகளை இம் மன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன். ”

(கூச்சல் குழப்பம்)

(6) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1972-73-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மீது விவாதம்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1972-73-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையையும் @ 1971-71-ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையையும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. இராம அரங்கண்ணல் : துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் நம்முடைய மாநிலத்திலே மற்றைய மாநிலங்களை விட மின்சாரம் அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பதை நாம் அறிவோம். இந்தியாவில் இருக்கிற எந்த மாநிலத்தை எடுத்துக் கொண்டு பார்த்தாலும் தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில் தமிழ் நாட்டிலிருக்கிற கிராமங்களெல்லாம் இன்றையதினம் மின்சார வசதியைப் பெற்று தமிழ் நாட்டிலே இருக்கிற மக்கள் அத்தனை பேரும் மின்சார வசதியைப் பெற முடியும் என்கிற அளவுக்கு நல்ல வசதியோடு இருப்பதை நாம் பார்க்கிறோம்.

இன்றைய தினம் ஏற்பட்டிருக்கிற மின்சாரத் தட்டுப்பாடு தமிழ் நாட்டிற்கு மட்டுமல்ல. அநேகமாக அண்டைய நாடுகள் எல்லாவற்றிலும் நம்முடைய பக்கத்திலிருக்கிற தென்னக மாநிலங்களிலும் சரி, நம்முடைய மாநிலத்திலும் சரி, கேரளத்திலும் சரி, மின்சாரத் தட்டுப்பாடு இருந்துகொண்டு வருகிறது. அகில இந்தியாவிலும் இந்தப் பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது. தமிழ் நாடு அரசு இவைகளையெல்லாம் சமாளிப்பதற்கு வழி வகைகள் வகுத்திருக்கிறது. (குறுக்கீடு) ஒரு காலத்திலே இந்த மாநில வாரிய ஊழியர்கள் எந்த அளவுக்கு சங்கடப்பட்டார்கள், அவர்கள் வசதி இல்லாமல் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்

---

* 101–123-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.